கண் வைத்திய நிபுணர்கள் பொர்க்க செய்யும் கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்

★ ★ ★

எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed

★ ★ ★

580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

மலர் 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 20 ஞாயிற்றுக்கிழமை (06-10-1991) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 306

# லலித் குழுவினருக்கு ஆதரவு அதிகரிப்பு?

## மேலும் பல அரசதரப்பு எம். பிக்கள் அதிருப்தியாளர் பக்கம் தாவலாம்

லண்டன், அக்டோபர் 6

ஆளும் ஐ. தே. க. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்துக்கு வரவிருக்கும் இவ்வேளையில், ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவுக்கு நாடாளுமன்றில் ஆதரவு மேலும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆளும்கட்சியிலிருந்து மேலும் பல எம்.பிக்கள் அதிருப்தியாளர் குழுவுக்குத் தாவக்கூடும் என்று அரசியல் அவதானிகளை மேற்கோள்காட்டி பி. பி. சியின் சிங்கள சேவை நேற்றுத் தெரிவித்தது.

இதேசமயம் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக, லலித் குழுவினர் செய்து வரும் தீவிர பிரசாரம், சிங்கள மக்கள் மத்தியில் ஒருவித உணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதிருப்தியாளர் அணி நடத்தும் கூட்டங்களுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடுகின்றனர் என்றும்—

புதிய அரசியல் நிலைமையினால் தென்பகுதி சிங்கள மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது என்றும்—

தமிழர்கள் மத்தியில் பதற்றநிலை தோன்றியுள்ளது என்றும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆந்திரப் பிரதேசத்தின் நக்ஸலைட்டுகளுக்கும் புலிகளுக்கும் தொடர்பாம்

பெங்களூர், அக். 6

ஆந்திரப் பிரதேசத்தின் நக்ஸலைட்டுகளுக்கு, மட்டக்களப்பைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய நபர் ஒருவர் ஏ. கே. 47 ரக ஆயுதங்களை வழங்கியதாக, ஆந்திரப் பிரதேச சட்ட சபையில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கும், ஆந்திரப் பிரதேச நக்ஸலைட்டுகளுக்கும் நெருங்கிய உறவு இருப்பது உறுதியாகி விட்டது என்று, ஆந்திரப் பிரதேச உள்நாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 9 மாதங்களில் நக்ஸலைட்டுகளின் தாக்குதலினால் 29 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. (த)

## ஆனையிறவில் நேற்று ராணுவம் - புலிகள் மோதல்

ஆனையிறவுப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் மோதல் இடம்பெற்றது.

படையினர் தமது காவலரண் பகுதியில் இருந்து சுமார் 75 யார் வரையில் முன்னேறியபோது, அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும்—

தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது படையினர் இழப்புகளுடன் அங்கிருந்து பின்வாங்கிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## கொழும்பு மாநாட்டில் ராவ் பங்குபற்றுவாராம்!

### ஸ்ரீலங்கா அமைச்சர் நம்பிக்கை

கொழும்பில் நடைபெற இருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவும் கலந்து கொள்வார் என்று சிறிலங்கா அமைச்சர் திரு. டிரோன் பெர்னாண்டோ நேற்று நம்பிக்கை வெளியிட்டார்.

சபாநாயகர் எம். எச். முகம்மதுவுடன் தாம் இவ்வார முற்பகுதியில் திரு. நரசிம்மராவை புதுடில்லியில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்த போது, அவர் மாநாட்டிற்கு வருகை தர இருப்பதாக தெரிவித்தார் என்றும் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கூறினார்.

சார்க் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் ராவ் கலந்து கொள்ளமாட்டார் என்று வெளியான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் அமைச்சர் சொன்னார். [ஓ-த]

## புதிய பிரதம நீதியரசர் சில்வா?

கொழும்பு, அக். 6

உயர் நீதிமன்றத்தின் புதிய பிரதம நீதியரசராக திரு. ஜி. பி. எஸ். டி. சில்வா நியமிக்கப்படுவார் என அறியப்படுகிறது.

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட திரு. எச். டபிள்யூ. தம்பையாவின் பதவிக் காலம் இம்மாதம் 20 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் உலகச் சட்டவியல் மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு நீதியரசர் தம்பையா வெள்ளிக்கிழமை அங்கு பயணமானார்.

அதனைத் தொடர்ந்து நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வா, பதில் பிரதம நீதியரசராக நேற்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம்செய்து கொண்டார்.

ஜனாதிபதி மீதான குற்றவிசாரணை பிரேரணை உயர் நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பப்படும் சூழ்நிலை உருவாகுமானால், அப்போது நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வாவே பிரதம நீதியரசர் என்ற வகையில் அதனைக் கையாண்டு விசாரணை குழுவுக்குரிய நீதியசர்களை நியமிப்பார். [அ-எ]

## யாழ். பல்கலைக்கழக டாக்டர்களுக்கு நியமனம் வழங்கியதில் உரிமை மீறல்

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, அக். 6

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் பயின்று சித்தியடைந்த மருத்துவர்களை மட்டுமே வடக்கு, கிழக்கில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிப்பது என்று சுகாதார அமைச்சு எடுத்த முடிவை உயர் நீதிமன்றம் நிராகரித்துத் தீர்ப்பளித்தது.

வடக்கு, கிழக்குப் பகுதிக்குள் மட்டும் தங்களுக்கு நியமனம் வழங்கப்படுவதை ஆட்சேபித்து, யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து சித்தியடைந்த 22 டாக்டர்கள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தவர்.

அவர்களின் மனுவை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், யாழ். மருத்துவ பட்டதாரிகள் (டாக்டர்கள்) நியமனத்தில் உரிமை மீறல் இடம் பெற்றுள்ளதாகவும்—

ஒரு வாரத்தில் புதிய நியமனங்களை வழங்கும்படியும் தீர்ப்பளித்திருக்கிறது. (உ-த)

## 12 வேங்கைகள் நினைவாக எழுச்சி நாள் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம், அக். 6

லெப்டினன்ட் கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளின் நான்காம் ஆண்டு நினைவு எழுச்சி நாள் நேற்றாகும்.

இதனையொட்டி குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பல இடங்களிலும் வீதிகளில் சந்திகள் தோறும் சோடனை செய்யப்பட்டிருந்தன. ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த சிறு பந்தல்களில் வேங்கைகளின் உருவப் படங்களை வைத்து, மக்கள் அஞ்சலிசெலுத்தினர்; எழுச்சிப் பாடல்களும் ஒலி பரப்பப்பட்டன.

நினைவு நாளை முன்னிட்டு யாழ். நகரிலும் ஏனைய இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நேற்று நண்பகலுடன் மூடப்பட்டன.

இந்திய - ஸ்ரீலங்கா அரசுகளின் கூட்டுச் சதியால், பலாலியில் தம்மைத் தாமே அழித்துக்கொண்ட பன்னிரு வேங்கைகளுக்கும் குடாநாட்டைத் தவிர்ந்த இனி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஈரோஸ் எம். பிக்கள் வருகை; எதிர்ப்பது அர்த்தமற்றது!

### முன்னாள் வட-கிழக்கு மாகாண அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, அக். 6

"யாழ். மாவட்ட சுயேச்சை (ஈரோஸ்) எம். பிக்கள் நாடாளுமன்றம் வருவதை குறைகாண முயல்வதோ அல்லது கண்டித்து எதிர்ப்பதோ அர்த்தமற்றதாகும்.

அவர்கள் தாம் நினைத்த நேரம் நாடாளுமன்றம் வருவதற்கும், நிற்பதற்கும் உரிமை உள்ளவர்கள். உண்மையான சனநாயக வரம்புக்குள் அவர்களின் வரவைத் தடுக்கவும் முடியாது."

— இவ்வாறு தெரிவித்தார் அரசியல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் திரு. தயான் ஜெயதிலக்கா. இவர் முன்னாள் ஈ. பி. ஆர். எல். எவ். மாகாண சபை நிர்வாகத்தில் அமைச்சராகவும் இருந்தவர்.

ரூபவாஹினிக்கு நேற்று அளித்த விசேட பேட்டி நிகழ்ச்சி ஒன்றில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட எம். பிக்கள் வருகையை வைத்து இனத்துவேஷத்தை தூண்டும் அப்பட்டமான முயற்சிகளையும் அவர் கண்டித்தார்.

யாழ். எம். பிக்கள் நாடாளுமன்றம் வருவதற்கு அவர்களுக்குச் சகல உரிமைகளும் உண்டு. அவர்களின் வரவு செல்லுபடியானதா என்பதைத் தேர்தல் ஆணையாளரே நிர்ணயிப்பார்.

யாழ். எம். பிக்களுக்கு உள்ள உரிமைகளை அவர்களின் மக்களே வழங்கினார்கள். சனநாயக வரன்முறைக்குள் அரசமைப்பு ரீதியாக உள்ள அந்த உரிமைகளை மறுக்கமுடியாது. அவற்றை மறுத்தால் அது சனநாயகத்துக்கு விரோதமானதாகும்.

யாழ். எம். பிக்கள் நாடாளுமன்றம் வருவதால் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை அவர்கள் முடிவுக்குக் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது. விடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்பா...... தாவல்காரரிலை ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி, முல்லையில் ஊரடங்கு

கொழும்பு, அக். 6

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களில் இன்று [ஞாயிறு] காலை 6 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. [ஓ-எ]

## விமான விபத்து: 120 படையினர் பலி

இந்தோனேஷியத் தலைநகர் ஜாகர்த்தாவில் நேற்று இடம்பெற்ற விமான விபத்தொன்றில் 120 விமானப் படையினர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷிய விமானப் படைக்கு சொந்தமான அந்த விமானம் அரசாங்கக் கட்டடம் ஒன்றின்மீது மோதி நொருங்கி வீழ்ந்தது.

## அதிருப்தியாளர் குழுவில் மேலும் ஓர் எம்.பி. இணைவு

### லலித் அணியில் இப்போது 12 பேர்

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான—ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர் குழுவில்—மற்றுமொரு எம். பி. சேர்ந்து கொண்டார்.

இதனால் லலித் தலைமையிலான அதிருப்தியாளர் குழுவில் எம். பிக்கள் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்தது.

அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பியான பி. எம். பி. சிறில் என்பவரே நேற்று லலித் குழுவில் சேர்ந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

## நம்பிக்கையில்லாபிரேரணை புதன், வியாழனில் விவாதம்

கொழும்பு, அக். 6

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளில் விவாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவாதத்தை இத்தினங்களில் நடத்த ஆளும் கட்சியினர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஆனால் எதிர்க்கட்சியினர் பிரேரணை பற்றி விவாதிக்க நான்கு நாட்கள் தேவை எனக் கோரவிருப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும்—

இந்தப் பிரேரணையை எப்போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது என்பது குறித்து நாளை மறுதினம் (செவ்வாய்) பிற்பகல் இரண்டு மணிக்கு நாடாளுமன்ற சபாநாயகரின் அறையில் நடைபெறும் கட்சித் தலைவர்கள் மாநாட்டில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## சமரசம் ஏற்படுவதற்கு இனி வாய்ப்பில்லை

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்களுக்கும் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கும் இடையில் சமரசம் ஏற்படுவதற்கு இனிமேல் வாய்ப்பு ஏதுமில்லை என்று அதிருப்தியாளர் குழுவுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆளும் கட்சியிலிருந்து மேலும் சில எம். பிக்கள் அதிருப்தியாளர் குழுவில் சேரக்கூடிய வாய்ப்பு இருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருப்பதை அடுத்து—

சமரச முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டதாக முன்னாள் அமைச்சர்களான லலித், அத்துலத்முதலி, காமினி திஸாநாயக்கா, ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-10]

## உயர் நீதிமன்றத்தில் லலித் குழு வழக்கு!

கொழும்பு, அக். 6

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தங்களை வெளியேற்றியதை ஆட்சேபித்து, லலித்தும் அவரது குழுவைச் சேர்ந்த மற்றும் ஏழு எம். பிக்களும் நேற்று முன்தினம் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து லலித் குழுவினர் வழக்குத் தாக்கல் செய்திருப்பதால் வழக்கு விசாரணை முடியும் வரை அவர்கள் தொடர்ந்து எம் பி பதவிகளை வகிக்கலாம் என்று சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகைய வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் உயர் நீதிமன்றம் அதனை விசாரித்துத் தீர்ப்பு வழங்கவேண்டும் என்று அரசமைப்பின் (99) (13) (அ)பிரிவு வலியுறுத்துகிறது.

விசாரணையின் முடிவில் லலித் குழுவினரை கட்சியிலிருந்து வெளியேற்றியது தவறு என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தால், அவர்கள் தொடர்ந்தும் எம். பிக்களாக இருக்க முடியும் என்று சட்டத்துறை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து லலித் குழுவினர் வழக்குத் தாக்கல் செய்ய முடிவு செய்தனர் ...

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

பாவித்த தும்பினாலான சேஸ்ரா மெத்தைகள், டன்சு மெத்தைகள், ஸ்பொஞ்ச் மெத்தைகள், மரத்தள பாடங்கள் உடன் தேவை. நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை தொடர்பு கொள்ளவும். புதிய இல: 234 கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம். [வைத்திலிங்கம் கம்டனிக்கு அருகாமையில்]
(18831)

## மணமகள் தேவை

யாழ் இந்து, சைவ போசன, A/L படித்த அழகிய மணமகனுக்கு 29 வயதிற்கு மேற்பட்ட படித்த, அழகிய மணமகள் தேவை. வெளிநாடு விரும்பத்தக்கது இல. 820, C/o உதயன்.
(4320]

சத்தோலிக்க வயது 40, நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தருக்கு 33 வயதுக்குட்பட்ட மணமகளும். அதே மதத்தைச் சேர்ந்த சுவிற்சர்லாந்தில் வேலை பார்க்கும் 27 வயது மணமகனுக்கு, சுவிஸ் செல்லக்கூடிய மணமகளும் தேவை. தரகர் இல்லை. விவரங்களுக்கு E. R. போல்பிள்ளை 44/1 பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (18318)

யாழ் இந்துப் பெற்றோர். வங்கியில் தொழில் பார்க்கும் 34 வயது மணமகனுக்கு படித்த, அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். இல; 356, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [18332]

## அம்பாள் திருமண சேவை

28 வயது M Sc. Computer, 30 வயது Electronic Engineer, 30 வயது B Sc. Computer ஆகிய மணமக்களுக்கு B. Sc. அல்லது I C M. A Part II மணப்பெண்கள் தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா 50/- சின்னச்சாமிக் குருக்கள் சண்முகநாதன். வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
[18103]

## ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் ,பியூட்டோ, 39/17 மின்சார நிலைய வீதி 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [இ/0687]

## சோதிடம்

பிரமதாசாவின் வெள்ளி திசை ஆயுட்கால ஜனாதிபதியாக்கும். ஏழரைச்சனி முற்கூறு அரசியல நெருக்கடிகளையும், பிற்கூறு மாராகத்தையும் உண்டாக்கும். செவ்வாய், வியாழ மாற்றங்கள் ரூ. 6 - 50, ரகுநாதன் பதிப்பகம், யாழ்ப்பாணம். எழுதியவர், பேராசிரியர் சத்தியதாஸன். (18323]

## செபமாலை மாதா உற்சவம்

கொழும்புத்துறை, அக். 6 கொழும்புத்துறை புனித செபமாலை மாதா திருநாள் கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 5-45 மணிக்கு முதல் திருப்பலியும் பின்பு திருவிழாத் திருப்பலியும் நடைபெற்று திருச்சுருப தேர்ப்பவனி இடம்பெறும்.
(இ-30)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 12 — 1924

மறைவு: 16 — 10 — 1990

அமரர்
**சங்கரப்பிள்ளை நல்லையா**
**(பரஞ்சோதி மாஸ்டர்)**

ஆண்டு ஒன்று ஆனபோதும் - உங்களை
மறக்க முடியவில்லை!
காலங்கள் சென்றாலும் - எம்
கண்ணீரும் ஓயவில்லை!

தங்கள் பிரிவால் வாடும்:
- குடும்பத்தினர்.

''ஸ்ரீரங்கம்''
இல. 25, சரன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். [4327]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
### நீங்காத நினைவில்
அக்டோபர் - 6



திருமதி
**பிலோமினம்மா டானியல்**
(மறைந்த மக்கள் எழுத்தாளர் கே டானியலின் மனைவி)

பிறப்பு: 1931 - 05 - 25
இறப்பு: 986 - 10 - 6

எமது நல்வாழ்வின் உயர்ச்சிக்காகவும், மறைந்த தங்கள் கணவரின் அரசியல், இலக்கிய, சமுதாய உயர்ச்சிக்காகவும், உங்கள் கடமையைச் சரிவரச் செய்த உங்களின் பசுமையான நினைவுகள் எம் இதயத்தில் என்றும் நிலைத்திருக்கின்றன.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''சாந்தி''
76/2, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [18308]

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு: 13 - 10 - 1985

திதி: 6 - 10 - 1991

அமரர்
**தம்பிப்பிள்ளை திருச்செல்வம்**
[கிராம சேவையாளர்]

அன்பு மழை பொழிந்து எம்மை என்றும் மிளிர வைத்த தெய்வமே! உங்களைப் பிரிந்த நாள் முதலாய் ஒளியிழந்து, துணிவிழந்து ஒதுங்கியே வாழ்கின்றோம். உங்கள் இடத்தை நிரப்பவோ இவ்வுலகில் யாருமில்லை விண்ணுலகில் எமக்குக் கவசமாக இருந்து கொண்டு அனுப்பும் ஆசிகள் எமக்கு நிறைய உண்டு. தங்கள் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

'பௌர்ணமி'
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி. [18...

## வேம்படி மகளிர் கல்லூரி
## ஆசிரியர் தின விழா

**07 - 10 - 1991**

திங்கட்கிழமை காலை 9-30 மணி முதல்
இடம்: மேபிள் தம்பையா மண்டபம்

பெற்றோர்களையும், நலன்விரும்பிகளையும், பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| செல்வி | திருமதி |
| இ. இராசரத்தினம் | க. துரைராசா |
| தலைவர் | தலைவர் |
| பாடசாலை அபிவிருத்திச் சங்கம். | பழைய மாணவர் சங்கம். |

[18329]

## 3 ஆம் மாத நினைவஞ்சலி



மலர்வு: 20 — 08 — 1902

உதிர்வு: 06 — 07 — 1991

**அமரர் சி. முத்துவேலு**
[இளைப்பாறிய உதவி அத்தியட்சகர், நில அளவைத் திணைக்களம்]

மாதங்கள் மூன்று மறைந்ததுவே
உம்மை மறக்க முடியவில்லை
பண்பாய் எம்மை வளர்த்த
பாசமுள்ள, எம் பிரியமுள்ள ஐயாவே!

நின் பிரிவு எம்மை வாட்டுகின்றதே
உமது ஆத்மா சாந்தியடைவதாக.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.

கட்டுவன்.
தெல்லிப்பளை. (18320)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 30 — 8 — 1919

உதிர்வு: 6 — 10 — 1988

**திருமதி திரேசம்மா இரத்தினம்**
[வித்யா ஸ்ரோர்ஸ், தருமபுரம்]

பாசமிக்க எம் அன்புத் தெய்வமே!
அன்போடு எம்மை அரவணைத்த தாயே!
எம்மை நீங்கள் பிரிந்து ஆண்டுகள்
மூன்றாகிடினும் அன்னையே உம்
அன்பு முகம் அழியாத கோலமம்மா
என்றுமே நீங்கள் எம்முடனே வாழ்ந்திடுங்கள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகின்றோம்.

அன்பான
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

'வித்யா ஸ்ரோர்ஸ்'
முல்லைத்தீவு வீதி, தருமபுரம்.
596/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/0613)

## வெளிவந்துவிட்டன!

போதகர் மேவின் குணசெல்வம் எழுதிய
**''பாவம் அந்த அப்பிள் பழங்கள்''**

பரிசுத்த வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறந்த கிறிஸ்தவ ஆவிக்குரிய புஸ்தகம். வாங்கி வாசித்து பயனடையுங்கள்

**''எக்காளத் தொனி கீதங்கள்''**

ஆவிக்குரிய கிறிஸ்தவ கீதங்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, முற்றிலும்புதியபாடல்கள், புதியஇராகங்கள்;

பெற்றுக் கொள்ளும் இடங்கள்:

**C. L. S. புத்தகசாலை,**
இல. 570, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை,**
இல. 21, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
[18334]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**A/L** பிரிவு 3 கலை, வர்த்தக
மீட்டல் வினா-விடை
Day Classes

ஆரம்பம்: 7-10-1991

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் (8-9) |
| வர்த்தகம் | — திரு. ரெட்ணம் (10-11) |
| கணக்கியல் | — திரு S K. பிரபாகரன் (9-10) |
| இந்து நாகரிகம் | — பிரபல ஆசிரியர் |
| அளவியல் | — பிரபல ஆசிரியர் (11-12) |

(சி/0679)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**
Paper Classes பிரிவு: 3
Day Classes பிரிவு: 6
[8-30 — 2-00]

Evening Classes பிரிவு: 3
[4-00 — 6-00]

ஆரம்பம்: 07 - 10 - 1991

மு. குறிப்பு: கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
(சி-0676)

## விதவைகளுக்கான
## சுயவேலை வாய்ப்பு ஊக்குவிப்பு காண் பயிற்சி நெறி

தென்னிந்திய திருச்சபை - யாழ். பேராயம்

Widows as Bread Winners - Training Programme-Leading to Self Employment)

குடும்பத் தலைவரை இழந்த விதவைகளுக்கு பின்வரும் துறைகளில் சுயவேலை வாய்ப்பை ஊக்குவிப்பதற்காக பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

★ தையல் ✶ கோழி வளர்ப்பு
★ ஆடு, மாடு வளர்ப்பு ★ தட்டச்சு

இப்பயிற்சி பெற விரும்பும் பெண்கள் தகுந்த ஆவணங்களுடனும், அப்பகுதி கிராம சேவையாளரின் அத்தாட்சியுடனும்,

இம்மாதம் 15 ஆம் திகதி (15 - 10 - 1991)

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்கப்படுகின்றனர்.

-செயற்திட்ட அதிகாரி.

ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை. (சி-0671)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஆசிரியர் தினம்

இன்று — அக்டோபர் ஆறாம் திகதி — உலக ஆசிரியர் தினம்.

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாசார அமைப்பினால் [யுனெஸ்கோவினால்] பிரகடனம் செய்யப்பட்ட ஆசிரியர் தினம் உலகளாவிய ரீதியில் எல்லா நாடுகளிலும் இன்று கொண்டாடப்படுகிறது.

உலகின் — உலக நாடுகளின் — எதிர்காலப் பிரசைகளான, சந்ததியினரான, மாணவர்களுக்கு கல்வி அறிவூட்டும் ஆசிரியர்களுக்கு இன்று சர்வதேச மதிப்பும், அந்தஸ்தும், கௌரவமும் வழங்கப்படுகின்றன.

ஈழத் தமிழ்ப் பிரதேசங்களிலும் கடந்த ஒருவார காலமாக பாடசாலைகள் தோறும் உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. மாணவர்கள் தமது ஆசிரியர்களைக் கௌரவித்து விழா எடுத்து வருகிறார்கள். பெற்றோர்களும் அதற்கு உறுதுணையாக இருந்து வருகிறார்கள்.

உலக வாழ்க்கையில் — மனித வாழ்வில் — மனிதனை உண்மையான மனிதனாக்குவது கல்வி. அதுவே அவனின் பெரும் சொத்து. அதனால் தான் எமது தமிழ் முதாதையர்கள் கல்வியே கருந்தனம் என்று கூறிப் போந்தனர்.

பாடசாலைகளை ஆலயங்களாகவும், அறிவொளி ஊட்டும் ஆசிரியர்களைத் தெய்வங்களாகவும் மதித்துப் போற்றி கௌரவித்த மரபு தமிழர்களுக்கு உண்டு.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதற்கு இணங்க ஆசிரியர்களைத் தெய்வமாக ஏற்றிப் போற்றிய பண்பாடும் தமிழருக்கு உரியது.

எனினும் குரு - சிஷ்ய பரம்பரைக் காலத்தின் பின்னர் கல்வித்துறையில் ஏற்பட்ட பல பரிணாம வளர்ச்சிகளின் விளைவாக, இப்போது ஆசிரியர் - மாணவர் உறவு அடுத்த பக்கமாக மாறிவிட்டது.

மாணவர்கள் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும், மதிப்பளிக்கவும், கனம் பண்ணவும், கௌரவிக்கவும் பின்னிற்கிறார்கள்.

இதனை ஒரு சந்ததிக் கேடாகக் கருத வேண்டியுள்ளது. இத்தகைய சூழ்நிலை உலகம் எங்கும் பரவி வருகிறது. அதனாலேயே ஆசிரியர்களின் உயர்ந்த பணியை முக்கியத்துவப்படுத்தும் விதத்தில் உலக ஆசிரியர் தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது எனலாம்.

ஆசிரியர்கள் மாணவ சமுதாயத்தின் சிற்பிகள். அவர்களுக்கு அறிவொளி ஏற்றும் ஞானச் சூரியன்கள். சமுதாயத்தில் அவர்களுக்கு உரிய மதிப்பும், அந்தஸ்தும், கௌரவமும் வழங்கப்பட வேண்டும். இதனை மாணவர்கள் மட்டுமன்றி பெரியவர்களும்- பெற்றோர்களும்- உணர்ந்து ஆசிரியர்களை இன்று ஒரு நாள் மட்டுமன்றி, என்றுமே மதித்துப் போற்றி ஏற்ற உறுதி கொள்வோமாக.

ஆனால் ஒன்று —

ஆசிரியர்கள் கௌரவத்தையும், மதிப்பையும் வெறுமனே எதிர்பார்க்கக் கூடாது. தங்களது பணி பெரும் சமூகப் பணி - தெய்வீகப் பணி - என்று மனமார உணர்ந்து, தங்களை அர்ப்பணித்து மாணவர்களுக்குக் கல்வி புகட்ட வேண்டும். சமூக உணர்வுள்ளவர்களாக - மாணவர்கள் பின்பற்றி நடக்கக் கூடிய நல்லொழுக்கங்கள் நிறைந்த முன்மாதிரியினராக - கடமைப்பற்றுள்ளவர்களாக - மாணவர் நலன் நாடி உழைப்பவர்களாகத் திகழ வேண்டும். நல்லாசிரியருக்குள்ள அத்தனை குணாம்சங்களும் பொருந்திய முழுமையான ஆசானாகத் திகழ இன்றைய தினம் அவர்களும் திடசங்கற்பம் செய்வார்களாக.

## மணலாறில் களப்பலியான மேலும் 28 வேங்கைகள்

யாழ்ப்பாணம், அக். 6

மணலாறு யுத்தத்தில் வீரமரணமடைந்த மேலும் 28 போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர்.

போராளிகள் வீரமரணமடைந்த தினமும் அவர்களின் பெயர், விவரமும் வருமாறு:-

செப்டெம்பர் 8 ஆம் திகதியில: சுபாஜிரா [வேசுமதி வேலுச்சாமி, குச்சவெளி], மலையான் [முத்துலிங்கம் செல்வக்குமார், மட்டுநகர்], சூரி [தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம், மட்டுநகர்]. சந்திரன் [ஆறுமுகம் சண்முகராசா, விசுவமடு].

செப்டெம்பர் 9 இல்: சேனாதி [ஏழுரு ரவீந்திரன், முரசுமோட்டை].

செப்டெம்பர் 14 இல்; செவித [இராசையா கமலநாதன், வவுனியா], ரவி [சின்னையா குமார், கிளிநொச்சி].

செப்டெம்பர் 16 இல்: சாந்தி [சதாசிவம் ரவிச்சந்திரன், வவுனியா], வாணன் [ஆறுமுகம் கணேசமூர்த்தி, மூதூர்], காஸ்ட்ரோ [இராமசாமி குமார், கிளிநொச்சி], குட்டி [தங்கராசா தாசன், திருமலை]. பகீதரன் [கிருஷ்ணபிள்ளை அருணகிரிநாதன், வட்டக்கச்சி], கிருஷ்ணா [சிவகுமார் சுதன், கண்டாவளை]. சுபன் [கோவிந்தசாமி கணேசசேகரன், கிளிநொச்சி], எட்வின் [சின்னையா பிரபாகரன், அலம்பில்], துலாஞ்சலி [சித்திரதேவி சோமசுந்தரம், புளியங்குளம்].

செப்டெம்பர் 17 இல்: மில்ராஸ் [வைரமுத்து விஜேந்திரன், மூதூர்]

செப்டெம்பர் 19 இல்: நேரு [பொன்னையா குமரதாஸ், கிண்ணியா] திமிலன் [சதாசிவம் ஜீவரட்ணம், கல்முனை]. வில்லியம் [சாமுவேலப்பு விஜயராசா, திருமலை]. எமில்டன் [பூச்சி கிருஷ்ணமூர்த்தி, ஊறி - ணடி]. டென்சியா [லங்கநாயகி பத்திநாதன், வெற்றிலைக்கேணி].

செப்டெம்பர் 21 இல்: சர்மா [முத்துலிங்கம் ஞானசீலன், வட்டக்கச்சி].

செப்டெம்பர் 22 இல்: சரத் [செபஸ்தியாம்பிள்ளை அற்புதராசா, முல்லைத்தீவு]. சுபீர் [ஆனந்தராசா விநோத்திரராசா, கிளிநொச்சி].

செப்டெம்பர் 23 இல்: குபேரன் [இராமச்சந்திரன் தர்மராசா, தனுக்காய்], றெஜினோல்ட் [ஆராமலிங்கம் பத்மராசா, பரந்தன்].

செப்டெம்பர் 25இல்: காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தேவன் [சிவலிங்கம் தமிழ்வாணன், மூதூர்], வீரமரணமடைந்தார். (உ)

## ஆசிரியர் தினம்; பாடசாலைகள் நாளை அரைநாள்

யாழ்ப்பாணம், அக். 6

உலக ஆசிரியர்தின நிகழ்ச்சிகளை நிறைவு செய்யுமுகமாக யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் நாளை முற்பகல் 11 மணியுடன் மூடப்படும்.

யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

நாளை மாலை நடைபெறவிருக்கும் மாவட்ட மட்டத்திலான ஆசிரியர்தின இறுதி நிகழ்ச்சிகளில் சகல ஆசிரியர்களையும் பங்கு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ-5)

## பயிலுநர் ஆசிரியருக்கு சம்பள உயர்வு

கொழும்பு, அக். 6

ஏற்கனவே நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 100 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது:

ஜனாதிபதி பிரேமதாஸவின் பணிப்பின்பேரில் வழங்கப்படவுள்ள இந்த சம்பள உயர்வு, தேசிய சேமிப்பு வங்கியில் ஆசிரியர்களின் பெயரில் வைப்பிலிடப்படும். (த)

## "விடுதலைப் புலிகள்" வெளியாகிறது

யாழ்ப்பாணம், அக் 6

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" பத்திரிகையின் ஆவணி-புரட்டாதி மாத இதழ் இன்று வெளியாகிறது.

ஆனையிறவுப் போர், மணலாறுச் சமர் பற்றிப் பல கட்டுரைகளையும், ஆய்வுகளையும் கொண்டு அதிக பக்கங்களுடன் இந்த இதழ் வெளியாகி உள்ளது.

பக்கத்துக்குப் பக்கம் போர் முனைகளையும். போர்முறைகளையும் விவரிக்கும் இந்த இதழின் அதிக பக்கங்கள் உள்ளன.

பத்திரிகையுடன் ஆனையிறவு ஆகாய, கடல், வெளி நடவடிக்கையின் போது வீரமரணமடைந்த புலி வீரர்களின் பதிவேடு தனியாக, 44 பக்கங்களில் ஒரு விசேட இணைப்பாக வழங்கப்படுகிறது.

அதன் பொருட்டு பத்திரிகையின் அன்பளிப்பு விலை 25 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. (அ)

## சென். பற்றிக்ஸ் பெற்றோர் தினம்

யாழ்ப்பாணம், அக். 6

யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் "பெற்றோர் தினம்" நாளை கல்லூரியின் மதுரம் சதுக்கத்தில் கொண்டாடப்படவுள்ளது

பிரதம விருந்தினர்களாக பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கமும் அவரது பாரியாரும் கலந்து கொள்கின்றனர். (ஒ)

## ஈரோஸ் எம். பிக்கள்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தலைப் புலிகள் தேசிய அரசியல் நீரோட்டத்தில் சேர்ந்து கொள்வார்கள் என்றும் தவறாக எடை போட்டு விடக்கூடாது.

ஆயுதப் போராட்டத்தை எதிர்த்துப் போரிடுவது அவசியமாயினும் அரசியல் தீர்வு ஒன்றை விரைந்து தேடிக் கொள்வது மிகமிக அவசியம். — என்றும் அவர் சொன்னார்.

அரசமைப்பு சர்ச்சை தொடர்பாகச் செய்யப்படும் பிரசாரங்கள் தெற்கில் இனக்கலவரம் ஒன்றைத் தூண்டுமா ? என்ற கேள்விக்கு திரு. ஜெயதிலக்கா பின்வருமாறு கூறினார்:—

நடந்து வரும் பிரசாரங்கள் சிங்கள மக்களின் இன உணர்வைத் தூண்டிவிடுதற்கென்று வேண்டுமென்று திட்டமிட்டே மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகின்றன.

கடந்த பல வருடங்களாக இனவாதம் புரிவதிலும் அதனை நிலைநாட்டுவதிலும் எங்கள் அரசியல்வாதிகள் ஈடுபட்டுள்ளார்கள். இப்போதைய பிரசாரங்களும் அதன் ஒரு வடிவமே. யாழ்ப்பாணம் நூல் நிலையத்தை எரித்த கலவரப் படுகொலை, 87இல் பொருளாதாரத் தடை ஆகியவற்றைப் போல இப்போதும் பெரும்பான்மையினரின் பேரினவாதம் வெளிக்கொணரப்படுகிறது இதன் மூலம் தெற்கில் இனக்கலவரம் வரக்கூடிய சாத்தியம் உண்டு என்றே தான் அஞ்சுகிறேன் - என்றார்.

[illegible] வதுடன் இப்போது தெற்கில் நடக்கும் அரசமைப்புச் சம்பந்தமான பிரச்சினையால் கடன் வழங்குவோர், வெளிநாட்டு மூலதனமிடுவோர் மனம்மாறலாம். அரசியல் ஸ்திரமின்மை ஏற்படும் பட்சத்தில் அவை எமது கையை மீறிப் போகலாம்.

இந்தப் பிரச்சினையில் பொதுமக்கள் இப்போதைக்கு வெறும் பார்வையாளராக இருப்பது போலத் தெரிவது உண்மைதான் எனினும் அது நீண்ட நிலைப்பாடாக இருக்கும் என்று சொல்லமுடியாது.

இந்தியாவில் மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல் செய்ய முனைந்தபோது தற்கொலைப் போராட்டம் தொடங்கியது.

அதேபோல, இப்போது பார்வையாளராக இருக்கும் மக்கள் காலம் செல்ல கலவரங்களிலும், வன்செயல்களிலும் ஈடுபடத் தூண்டப்படலாம்.

மொத்தத்தில் இப்போது தொடங்கப்பட்டுள்ள அரசமைப்புப் பிரச்சினை இந்த நாட்டைப் போரும், வன்செயல்களும் தொடரும் ஒரு நாடாக்கிவிடும் ஆபத்தும் உண்டு. — இவ்வாறு திரு. ஜெயதிலக்கா கூறினார். (அ)

## தர்மபுரியில் 7 பேர் மரணம்

புதுடில்லி, அக். 6

தமிழ்நாட்டில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பலவி என்ற கிராமத்தில் நேற்று எதிரும் புதிருமாக வந்த இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் ஏழு பொதுமக்கள் உயிரிழந்தனர். 23 பேர் படுகாயமடைந்தனர். (உ)

## லலித் குழுவின...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்நிலையில்—

நாடாளுமன்றில் சபாநாயகர் தவிர்த்து ஆளும் கட்சியின் பலம் 124 ஆகும். அதில் அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த 12 பேர் போக 225 பேர் கொண்ட நாடாளுமன்றில் — அரைவாசிக்குக் குறைந்த எண்ணிக்கையில் — 112 எம். பிக்களே ஆளும் ஐ. தே. கட்சியில் தற்போது இருக்கின்றனர்.

புதிதாக நாடாளுமன்றம் செல்லவிருக்கும் சுயேச்சைக் குழுவின் (ஈரோஸின்) எம். பிகள் மற்றும் தமிழ்க் கட்சிகள், முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் எம். பிக்கள் ஆகியோரையே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவதற்கு ஆளும் கட்சி நம்பியிருக்கிறது

இந்த வகையில் சுமார் 18 முதல் 20 எம். பிக்களின் ஆதரவு ஆளும் கட்சிக்குக் கிடைக்க கூடும்.

இத்தகைய நிலையில் மேலும் சில எம். பிக்கள் ஆளும் கட்சியை விட்டு விலகி அதிருப்தியாளர் குழுப்பக்கம் சேர்ந்தால், அது அரசாங்கம் கவிழும் நிலையை ஏற்படுத்தும் என்று அவதானிகள் தெரிவித்தனர். (உ-ஒ-10)

## உயர் நீதி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தினம் கடந்த வெள்ளிக்கிழமை என்பதும் —

அன்றைய தினமே அவர்கள் வழக்குத் தாக்கல் செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கவை. (உ-த)

## வயல்களில் ஷெல் 'குப்பை'

பொன்னாலை, மூளாய் கடற்பகுதியை அண்டியுள்ள வயல்களில் 'ஷெல்' சிதறல்கள் எங்கும் பரந்து பரவிக் காணப்படுகின்றன வட லுக் [illegible] இந்தியா காட்டினை அது ஒத் திருக்கிறது. (ஒ-28)

## சிங்களச் சட்டத்தால் பாதிப்பு; நிவாரணம் பெற முயற்சி

யாழ்ப்பாணம், அக். 6

சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நோக்கத்துக்காக யாழ் மாவட்ட ஓய்வூதியர் சங்கங்கள் சம்மேளனம் சட்டத்தரணி திரு. வி. கோமகேஸ்வரன் தலைமையில் ஓர் உப குழுவை நியமித்துள்ளதாக சம்மேளனத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எந்த ஒரு விதத்திலும் பாதிக்கப்பட்ட ஊழியர்கள், ஓய்வூதியர்கள் தமது சொந்த பாதிப்பு விபரங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறும், சம்மேளனத்தின் கூட்டம் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு கூடிய சம்பளத்துக்கு அனுமதி

கூட்டுறவுச் சங்கங்கள் தமது ஊழியர்களுக்குக் கூடுதல் சம்பளம் வழங்க அனுமதி வழங்கப்படுவதாக அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி அறிவித்திருக்கிறார்.

கூட்டுறவுச் சங்கங்கள் தங்களின் நிதிவளங்களைப் பொறுத்து உயர் சம்பளங்களை வழங்கலாம் என்றும்—

அதற்காக கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் முன் அனுமதி பெறவேண்டிய தேவை இல்லை என்றும் அமைச்சர் கூறினார். (உ-எ)

## யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு கெயர் - யு. எஸ். எய்ட் நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம், அக். 6

யாழ். மாவட்டத்தில் உணவு உற்பத்தியை பெருக்கி வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்து அதன் மூலம் பொருளாதார ரீதியில் பாதிப்புற்றவர்களை மேம்படுத்தும் முகமாக கெயர் / யு. எஸ். எய்ட் நிறுவனம் தனது விவசாயத் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக 15, 000 விவசாயிகளுக்கு உதவி வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 850 ஏக்கரில் பருப்பு வகை, 400 ஏக்கரில் எள்ளு, 325 ஏக்கரில் உள்நாட்டு,வெளிநாட்டு மரக்கறி வகை, 1,000 ஏக்கரில் குரக்கன், 125 ஏக்கரில் மிளகாய். 112 5 ஏக்கரில் முரவள்ளி, 1,875 ஏக்கரில் நெல் செய்கை கடன்னப்படவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மூலம் 9 ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக 1,875 ஏக்கரில் நெற்செய்கைக்கான உள்ளீடுகள் இலவசமாக வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக தெரிவுசெய்யப்பட்ட 15,000 விவசாயிகளுக்கும், ஒருவருக்கு ஒரு மண்வெட்டி வீதம் வழங்கப்படும். நீர் இறைக்கும் இயந்திரம் 100 விவசாயிகளுக்கு 1 என்ற அடிப்படையில் 15,000 விவசாயிகளும் பயனடையவழி செய்யப்படும்.

யாழ். மாவட்டத்தில் இத் திட்டத்தை நிறைவேற்ற கெயர் / யு எஸ். எயிட் நிறுவனம் 2 கோடி 80 லட்சம் ரூபாவை செலவு செய்ய உள்ளது. (த)

## காலமானார்

சென்னை, அக். 6

இந்தியப் பத்திரிகை உலகின் ஜாம்பவான் என்றழைக்கப்பட்டு வந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிறுவனத்தின் உரிமையாளர் ராம்நாத் கோயங்கா காலமானார்.

அவரின் உடல் நேற்று பம்பாயில் இருந்து சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கு மாலையில் தகனம் செய்யப்பட்டது. (ஓ-எ)

## பயிலுநர் ஆசிரியர் மேலும் 12 ஆயிரம் பேர்

கொழும்பு, அக். 6

12 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக, கல்விச் சேவைகள் ஆணைக்குழு போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி வெளிவரும் வர்த்தமானியில் போட்டிப் பரீட்சை தொடர்பாக விவரங்கள் வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டுகிறது. (த)

## 'குமண' வந்தது

யாழ்ப்பாணம், அக். 6

தமிழ் மீனவர்களை ஏற்றிக் கொண்டு திருமலை சென்றிருந்த 'குமண' கப்பல் அங்கிருந்து தெழுப்பில் சிகிச்சை பெற்ற நோயாளர்கள் 25 பேரையும் ஏற்றிக்கொண்டு நேற்று மீண்டும் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

139 தபால் பொதிகளும் இதில் எடுத்து வரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5 15)

## பெண் எழுத்தாளருக்கு நோபல் பரிசு

ஸ்டொக்ஹோம், அக். 6

இலக்கியத்திற்கான இந்த ஆண்டு நோபல் பரிசு தென்னாபிரிக்க நாட்டவரான நதீன் கொட்டிமியர் என்ற பெண் எழுத்தாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் இனப்பாகுபாட்டுக்கு எதிரான கருத்துக்களைத் தொடர்ந்து துணிவுடன் எழுதும் நதீன் கொட்டிமியர் தென்னாபிரிக்க இலக்கிய உலகில் முன்னணியில் திகழ்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது: (ஒ-10)

## இந்தியப் பிரசை கைது

கொழும்பு, அக். 6

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வெள்ளி காலை 45ஆயிரம் அமெரிக்க டொலர்களையும், 19 ஆயிரம் ரூபாவையும் கடத்திச் செல்ல முயன்ற இந்தியப் பிரசை ஒருவரை சுங்கப் பகுதியினர் கைது செய்தனர்.

## 12 வேங்கை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நொச்சி, முல்லைத்தீவு. வவுனியா மாவட்ட மக்களும் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

பன்னிரு வேங்கைகளும் துயில்கொள்ளும், வல்வெட்டித்துறை தீருவில் மாவீரர் சதுக்கத்தில் நேற்று மாலை மாபெரும் நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் பலர் அங்கு நினைவுரை ஆற்றினர்.

(ஓ-5 3-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதங்களை ஈராக் தயாரிக்கிறது!

## ஐ. நா.வின் ஆய்வுக்குழு கண்டறிந்ததாக தகவல்

நியூயோர்க், அக். 6

அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈராக் முழு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது.

அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈராக் ஈடுபட்டிருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்காக அந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் குழுவைச் சேர்ந்த சிலர் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றனர்.

ஈராக்கில் தமது வேலைகளை முடித்துக் கொண்டு ஐ. நா. குழு அமெரிக்கா திரும்பியுள்ளது,

அணு ஆயுதங்களை ஈராக் தயாரிக்கிறது என்பதை நிரூபிக்கும் பல ஆதாரங்களை ஐ. நா. குழு கொண்டு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கலைஞர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக். 6

வலிகாமம் பிரிவுக்குட்பட்ட எழுத்தாளர்கள், ஓவியர்கள், நடிகர்கள், பாடகர்கள் ஆகியோருக்கும், நடனம், சங்கீதம், நாதஸ்வரம், தவில் ஆகிய துறைகளைச் சேர்ந்த கலைஞர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை பத்து மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளனர். [உ]

## கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், அக். 6

யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றுவரும் மாமனிதர் கலைஞானியின் அரும் பொருட் கண்காட்சி மேலும் மூன்று தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி பல்கலைக் கழக இந்து மன்றத்தின் ஆதரவில் கடந்த ஒன்பது நாட்களாக நடைபெற்றுவருகிறது. இன்று நிறைவுபெற இருந்தது.

மாணவர்கள், பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க கண்காட்சி எதிர் வரும் புதன்கிழமைவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (அ)

# அகதிகளுக்கு எதிராக ஜேர்மனியில் வன்முறை!

இரு ஜேர்மனிகளும் ஒன்றிணைந்த ஓராண்டு நினைவையொட்டி கடந்த வியாழக்கிழமை அங்கு மிகக் கோலாகலமான கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. அதே சமயம் அன்றைய தினம் வெளிநாட்டு அகதிகளுக்கு எதிரான வன்முறைகளும் பரவலாக நடந்தன என்று அறிவிக்கப்படுகிறது.

அகதிகளின் குடியிருப்புக்கள் மீது தீப்பந்தங்கள் மற்றும் பெற்றோல் குண்டு வீச்சுக்கள் போன்ற சம்பவங்கள் ஆங்காங்கே நடந்தன.

ஹன்சென் என்ற நகரத்தில் வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டு ஒன்று வீசப்பட்டபோது அங்கிருந்த இரண்டு லெபனானியக் குழந்தைகள் கடும் தீக்காயங்களுக்கு உள்ளானார்கள்.

இதேவேளை ஜேர்மனியின் இணைப்புக்குப் பாடுபட்டவர்களில் முக்கியமானவராகக் கருதப்படும் ஜேர்மன் சமஷ்டி அதிபர் ஹெல்மட் கோல் தற்போது பெருங் கண்டனத்துக்கு ஆளாகி உள்ளார்.

நாடு முழுவதும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது என்றும், கிழக்கு ஜேர்மனியில் முன்பு அரசினால் நிர்வகிக்கப்பட்ட பல நிறுவனங்கள் மூடப்பட்டதால் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலையிழந்துள்ளனர் என்றும் கிழக்கு ஜேர்மன் மாநிலமான பிறண்டர் போர்க் பிரதமர் பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். ஹெல்மட் கோலின் அரசு கிழக்கு மாநில மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறி விட்டன என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

## 21 மீனவரும் நாளை புறப்பாடு

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு போய்ச் சேர்ந்த 21 இந்திய மீனவர்களும் நாளை அவர்களது தாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்குத் தனித்துவமான நிறுவனம்).

**93** ஆரம்பம்: 19-10-1991

8-00 மணி

எமது தனித்துவமான ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| பொருளியல்: திரு. க. கலாகரன் | இந்துநாகரிகம் } திரு: காரை |
| வர்த்தகம்: திரு. தேவா | இந்துசமயம் } சுந்தரம்பிள்ளை |
| கணக்கியல்: திரு. வன்னியசிங்கம் | தமிழ்: குழந்தை |
| அளவையியல்: திரு. சுப்பிரமணியம் | புவியியல்: குணராசா |
| அரசியல்: திரு. சிலன். | சரித்திரம்: விஜயன் |

மு. குறிப்பு:

★ அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்: முதல் 100 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்.

★ 93 ஆண்டு A/L எமது நிறுவனத்தில் கற்கும் மாணவர்களுக்கு O/L இலவச வினா-விடை வகுப்புக்களும் நடைபெறும். (இ.0688)



# ஆசிரியர்கள் சூரியர்கள்

இந்தப் பச்சைத் தாவரங்கள்
முளைப்பதற்கும், தொகுப்பதற்கும்
கல்வி ஒளியை என்றும் அள்ளி
வழங்குகின்ற சூரியர்களின்
வாழ்வு ஒளி மிக்கதாய் அமைய
நன்றியுடன் வாழ்த்துகின்றோம்,

யாழ். இந்து உயர்தர
மாணவர் மன்றம் [18106]



# எமது ஆசிரியர்களைக் கௌரவிப்போம்

உலக ஆசிரியர்கள் அனைவரும் கௌரவிக்கப்படுகின்ற இன்றைய தினத்தில் எமது பாடசாலை சகல சமூக நல விடயங்களிலும் முன்னுக்கு நிற்பதற்கு உழைத்த, உழைக்கின்ற எமது ஆசிரியர்களைக் கௌரவிப்பதில் நாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

பழைய மாணவர் சங்கம். பாடசாலை அபிவிருத்திச் சபை.

யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம் [இ-0666]



அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க

# அரசாங்க எழுதுனர் சேவை

போட்டிப் பரீட்சைக்கான

## 1 மாத துரித பயிற்சி வகுப்புகள்

[புதிய பிரிவு]

ஆரம்பம்: 07-10-1991 பி. ப. 2மணி

பாடநெறி: மொழித்தேர்ச்சி - பொதுஉளச்சார்பு

★ விரிவுரைகள் - திங்கள், செவ்வாய், புதன் - பிற்பகல் 2—5
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 250/- (முழுப்பயிற்சிக்கும்)

**ASTAN** INSTITUTE,
101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்) [இ-0670]



# தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## விசேட அறிவித்தல்

★ க. பொ. த. உயர்தர 93ஆம் ஆண்டுப் பிரிவு வகுப்புக்களை 15-10-1991 இற்கு பின்னர் ஆரம்பிக்கலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

★ 01-11-1991 க்கு பின்னர், சந்தா செலுத்தி அடையாள அட்டை பெறத் தவறும் நிறுவனங்கள் பட்டியலிலிருந்து நீக்கப்படும். அந்நிறுவனங்கள் தொடர்ந்து இயங்க முடியாது.

★ பாடசாலை நாட்களில் மாலை வகுப்புகளை 4-00 மணிக்கு முன்னர் ஆரம்பிக்க வேண்டாம்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.
[18337]



# NEW SCIENCE ACADEMY
JAFFNA.

## 93 A/L

ஆரம்பம்: 16-10-1991

குறிப்பு: 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

[இ-0622]



# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
## புதிய மாணவரைப் பதிவு செய்தல்
### கல்வியாண்டு 1990 / 91

1990/91 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் 1991 அக்டோபர் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் தங்களைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவோரின் இடத்துக்கு வேறு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

பதிவாளர்.

[இ-0620]


# மரண அறிவித்தல்கள்

## திரு. சண்முகநாதன் வசந்தன்

திரு. சண்முகநாதன் வசந்தன் (பழைய மாணவன், யாழ். இந்துக் கல்லூரி) லண்டனில் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. சு. சண்முகநாதன், திருமதி சௌந்தரநாயகி சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மகனும், லலிதா, நிர்மலா (லண்டன்), சஞ்சலா (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரரும், திரு. பு ஜெயக்குமார் (பொறியியலாளர், லண்டன்), திரு. ந. விஜயகுமாரன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், லக்ஷ்மன், சங்கர், பிரேமிளா ஆகியோரின் ஆசை மாமனாரும், காலஞ்சென்ற திரு. சிவகுருநாதன், திரு: அருளம்பலம் ஆகியோரின் பெறாமகனும், திருமதி மீ. மயிலு, காலஞ்சென்ற திருமதி செ. முத்தையா, புஷ்பராசா தம்பதிகள், துரைராசா தம்பதிகள் ஆகியோரின் மருமகனும், திருமதி குணநாயகி மகாதேவா, திருமதி செல்வநாயகி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பெறாமகனும் ஆவார். அன்னாரின் சமக்கிரியைகள் லண்டனில் நடைபெறும் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றேன்.

தகவல்:
திருமதி ச. சௌந்தரநாயகி
தாயார்
130, கண்டி றோட்,
அரியாலை.
(18107)

## திருமதி மணிமேகலை இராசலிங்கம்

திருநெல்வேலி தாளையடி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி மணிமேகலை இராசலிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சின்னத்தம்பி கந்தையா, தையல்முத்து ஆகியோரின் ஏக புத்திரியும், திரு. இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், அமிர்தவல்லி, திருமதி இராஜேஸ்வரி சண்முகநாதன், காந்தரூபன் (ரூபன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி மாக்கற்), சாந்தரூபன் (சுவிற்சர்லாந்து), சுயேந்திரன், விக்னேஸ்வரன், சுரேஸ், சசிகலா, ரதிகலா, கிரிதரன் ஆகியோரின் அன்புத் தயாரும், திரு. பொ. சண்முகநாதன் (சின்னராசா - இராணி ஸ்ரோர்ஸ், காவி) அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ் சென்ற அருளானந்தம், யோகானந்தம், செல்வராசா, பேரின்பநாயகம், பதுமாவதி, சரோஜினி தேவி, தில்லைநாதன் (கனடா), சற்குணவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பற்குணராசா, சத்தியநாதன், வரதராசன், பரமேஸ்வரி, ஜெயமணி, பங்கயவல்லி, கமலாதேவி, இரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 06 - 10 - 1991 ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
திரு. இராசலிங்கம்,
ரூபன் ஸ்ரோர்ஸ்,
திருநெல்வேலி மாக்கற்.
தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.
[18336]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org